30

0162

AL/2018/25-C/T-II

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved ]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2018 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2018 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2018

ඉතිහාසය II (I කොටස)
வரலாறு II (பகுதி I)
History II (Part I)

**25-C** **T** **II**

23.08.2018 / 0830 - 1140

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

**நவீன உலக வரலாறு - கி. பி. 1500 - 1989 வரை**

**பரீட்சைச் சுட்டெண் :** ..........................

**அறிவுறுத்தல்கள் :**

* இப்பகுதியில் **40** வினாக்கள் உள்ளன. **எல்லா** வினாக்களுக்கும் **இவ்வினாப்பத்திரத்திலேயே** விடை எழுதுக.
* ஒவ்வொரு வினா தொடர்பாகவும் **ஐவைந்து** விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று சரியானது. ஒவ்வொரு வினாவுக்குமுரிய சரியான விடையைத் தெரிவுசெய்து, அதனை **அறிவுறுத்தல்களுக்கமைய** இப்பத்திரத்திலேயே **குறிப்பிடுக.**
* இப்பகுதிக்கு **40** புள்ளிகள் வழங்கப்படும்.
* **இரண்டு** பகுதிகளுக்கும் வழங்கப்பட்டுள்ள நேரம் **மூன்று மணித்தியாலங்களாகும்.** உமது விடைத்தாள்களை ஒப்படைக்கும்போது **பகுதி I** இற்கான விடைகளை எழுதிய பின்னர், அதனைப் பகுதி II இற்கான விடைத்தாளுடன் இணைத்து ஒப்படைக்க வேண்டும்.

## பகுதி I

* **1** தொடக்கம் **10** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் **ஐவைந்து** பெயர்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அவற்றுள் **ஒன்று** மற்றவையோடு **பொருந்தாது. பொருந்தாத** அப்பெயரைத் தெரிவுசெய்து, அதன் **இலக்கத்தை அடைப்புப் புள்ளிக்கோட்டில்** எழுதுக.

**1.** (1) அப்பலாச்சியன் (2) பிரணீஸ் (3) அல்ப்ஸ்
(4) அப்பினைன்ஸ் (5) கார்ப்பேதியன் (......)

**2.** (1) ஸ்போர்சா (2) மெடிசி (3) எஸ்தே
(4) கொன்ஷாகா (5) லங்காஸ்ரியன் (......)

**3.** (1) மக்கியாவல்லி (2) ஜீன் போதின் (3) றிச்சலியு
(4) தோமஸ் ஹொப்ஸ் (5) கியுகோ குறோசியஸ் (......)

**4.** (1) ஜோன் கபொற் (2) பிறெஸ்ரர் ஜோன் (3) ஜோலியற்
(4) லா சலி (5) மார்குயிற்றே (......)

**5.** (1) டுப்ளே (2) றொபேர்ட் கிளைவ் (3) வெலஸ்லி
(4) மின்ரோ (5) வாரன் கேஸ்ரிங்ஸ் (......)

**6.** (1) பொஸ்ரன் படுகொலை (2) பொஸ்ரன் தேநீர் விருந்து
(3) பஸ்ரீல் வீழ்த்தப்படல் (4) பிலடெல்பியாவில் நடந்த கொன்ரினன்ரல் காங்கிரஸ்
(5) 1776 சுதந்திரப் பிரகடனம் (......)

**7.** (1) சுன் - யாற் - சென் (2) சியாங் கை சேக் (3) சூ - என் - லாய்
(4) டிங் டியம் (5) டெங் ஷியாவோபிங் (......)

**8.** (1) ஹரி ரூமன் (2) ஐசனோவர் (3) ஜோன் எவ் கெனடி
(4) றிச்சர்ட் நிக்ஸன் (5) மார்ட்டின் லூதர் கிங் (......)

**9.** (1) ஜவஹர்லால் நேரு (2) முகம்மது அலி ஜின்னா (3) லால் பகதூர் சாஸ்திரி
(4) மொராஜி தேசாய் (5) ராஜீவ் காந்தி (......)

[பக். 2 ஐப் பார்க்க

10. (1) ஐக்கிய நாடுகள் தாபனம் (UNO)
(2) அரபு லீக்
(3) பெற்றோலியம் ஏற்றுமதி நாடுகளின் அமைப்பு (OPEC)
(4) ஐரோப்பிய பொருளாதார சமூகம் (EEC)
(5) தென்கிழக்காசிய நாடுகளின் சங்கம் (ASEAN) (......)

- **11** தொடக்கம் **15** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் **ஐந்து** சோடிப் பெயர்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் **ஒரு** சோடியிலுள்ள பெயர்கள் ஒன்றுடனொன்று **பொருந்தவில்லை. பொருந்தாத** அச்சோடியைத் தெரிந்து, அதன் **இலக்கத்தை அடைப்புப் புள்ளிக்கோட்டில்** எழுதுக.

11. (1) பௌத்தம் - தாய்லாந்து
(2) இந்துமதம் - பர்மா
(3) யூதமதம் - இஸ்ரேல்
(4) கத்தோலிக்கம் - பிலிப்பைன்ஸ்
(5) இஸ்லாம் - பாகிஸ்தான் (......)

12. (1) யூப்பிரட்டிஸ் - டைகிரிஸ் - ஈரான்
(2) இந்துநதி - பாகிஸ்தான்
(3) ஹுவாங் கோ - சீனா
(4) ஐராவதி - பர்மா
(5) தேம்ஸ் - இங்கிலாந்து (......)

13. (1) வாஸ்கொடகாமா - கள்ளிக்கோட்டையை அடைந்தமை
(2) பேர்டினன்ட் மகலன் - புதிய உலகைக் கண்டுபிடித்தமை
(3) பீட்றோ அல்வறிஸ் கப்ரால் - பிறேசிலைக் கண்டுபிடித்தமை
(4) ஹெர்னான்டோ கோட்டெஸ் - மெக்சிக்கோவை வெற்றி கொண்டமை
(5) பிரான்ஸிஸ்கோ பிஸாரோ - பெரு நாட்டை வெற்றி கொண்டமை (......)

14. (1) மகோன்னத புரட்சி - ஒலிவர் குறொம்வெல்
(2) அமெரிக்கப் புரட்சி - ஜோர்ஜ் வாஷிங்டன்
(3) ரஷ்யப் புரட்சி - வி. ஐ. லெனின்
(4) சீனப் புரட்சி - மாஓ சேதுங்
(5) கியூபாப் புரட்சி - பிடல் கஸ்றோ (......)

15. (1) அடம் ஸ்மித் - தேசங்களின் செல்வம்
(2) தோமஸ் பெயின் - மனிதனின் உரிமைகள் (Rights of Man)
(3) ரவீந்திரநாத் தாகூர் - கீதாஞ்சலி
(4) ஜவஹர்லால் நேரு - உலக சரித்திரச் சுருக்கம் (Glimpses of World History )
(5) ஹோ - சீ - மின் - அரசும் புரட்சியும் (State and Revolution) (......)

- **16** தொடக்கம் **25** வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் சில பெயர்கள் / கூற்றுகள் / திகதிகள் என்பவற்றின் தொகுதிகள் **X, Y** என்னும் நிரல்களில் தரப்பட்டுள்ளன. **Y** நிரலில் தரப்பட்டுள்ள பெயர்கள் / கூற்றுகள் / திகதிகள் **X** நிரலில் தரப்பட்டுள்ளவற்றுடன் ஏதோ ஒரு வகையிலே தொடர்புபட்டவை. ஆனால் அவை சரியான தொடர் ஒழுங்கிலே **தரப்படவில்லை. Y** நிரலில் உள்ளவற்றை **X** நிரலிற்கேற்பச் சரியாக ஒழுங்குபடுத்தும்போது கீழே தரப்பட்டுள்ள ஐந்து சேர்மானங்களுள் **ஒன்று** சரியானதாகும். சரியான சேர்மானத்தைத் தெரிவுசெய்து, அதன் **இலக்கத்தை அடைப்புப் புள்ளிக்கோட்டில்** எழுதுக.

16.

| | X | | Y |
|---|---|---|---|
| (i) | ஜோன் வைக்ளிவ் | A | ஜேர்மனி |
| (ii) | ஜோன் ஹஸ் | B | பிரான்ஸ் |
| (iii) | மார்டின் லூதர் | C | சுவிட்சர்லாந்து |
| (iv) | ஹூல்றிஜ் சுவிங்கிளி | D | இங்கிலாந்து |
| (v) | ஜோன் கல்வின் | E | பொகிமியா |

(1) BEACD (2) CEABD (3) DEACB (4) DECAB (5) EDACB (......)

[பக். 3 ஐப் பார்க்க

| | X | | Y |
|---|---|---|---|
| **17.** | (i) மொகலாயர் | A | சீனா |
| | (ii) டொகுகாவா | B | இந்தியா |
| | (iii) மஞ்சு | C | வியட்நாம் |
| | (iv) நிகுயென் | D | சீயம் |
| | (v) சாகிரி | E | ஜப்பான் |

(1) BEACD (2) CEABD (3) DEACB (4) DECAB (5) EDACB (……)

| | X | | Y |
|---|---|---|---|
| **18.** | (i) பொதுமக்கள் சபை | A | ரஷ்யா |
| | (ii) றைஸ்ராக் | B | சீன மக்கள் குடியரசு |
| | (iii) டூமா | C | இந்தியா |
| | (iv) லோக் சபா | D | இங்கிலாந்து |
| | (v) தேசிய மக்கள் காங்கிரஸ் | E | ஜேர்மனி |

(1) BEACD (2) CEABD (3) DEACB (4) DECAB (5) EDACB (……)

| | X | | Y |
|---|---|---|---|
| **19.** | (i) கிழக்கிந்தியத் தீவுகள் | A | பிரான்ஸ் |
| | (ii) மலாயா | B | அமெரிக்கா |
| | (iii) இந்தோ - சீனா | C | பெல்ஜியம் |
| | (iv) கொங்கோ | D | பிரித்தானியா |
| | (v) பிலிப்பைன்ஸ் | E | ஒல்லாந்து |

(1) BEACD (2) CEABD (3) DEACB (4) DECAB (5) EDACB (……)

| | X | | Y |
|---|---|---|---|
| **20.** | (i) அமெரிக்கப் புரட்சி | A | 'சமாதானம், நிலம், பாண்' |
| | (ii) பிரான்சியப் புரட்சி | B | 'உழுபவருக்கே நிலம்', 'முன்னோக்கிய பெரும் பாய்ச்சல்' |
| | (iii) மேஜி புனர்நிர்மாணம் | C | 'வளமான நாடு', 'வலிமையான இராணுவம்' |
| | (iv) ரஷ்யப் புரட்சி | D | 'பிரதிநிதித்துவம் இன்றி வரியில்லை' |
| | (v) சீனப் புரட்சி | E | 'சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்' |

(1) BEACD (2) CEABD (3) DEACB (4) DECAB (5) EDACB (……)

| | X | | Y |
|---|---|---|---|
| **21.** | (i) ஆர்ஜென்டீனா | A | அல்ஜியர்ஸ் |
| | (ii) எகிப்து | B | புவனஸ் அயர்ஸ் |
| | (iii) அல்ஜீரியா | C | காட்டும் |
| | (iv) சூடான் | D | திரிபோலி |
| | (v) லிபியா | E | கெய்ரோ |

(1) BEACD (2) CEABD (3) DEACB (4) DECAB (5) EDACB (……)

| | X | | Y |
|---|---|---|---|
| **22.** | (i) மேரி கியூரி | A | இந்தியாவின் முதற் பெண் பிரதமர் |
| | (ii) வலன்ரினா தெரஸ்கோவா | B | பிரித்தானியாவின் முதற் பெண் பிரதமர் |
| | (iii) இந்திரா காந்தி | C | இஸ்ரேலின் முதற் பெண் பிரதமர் |
| | (iv) கோல்டா மேயர் | D | ரேடியத்தைக் கண்டுபிடித்த போலந்து விஞ்ஞானி |
| | (v) மார்கிறட் தச்சர் | E | விண்வெளியை அடைந்த முதற் பெண்மணி |

(1) BEACD (2) CEABD (3) DEACB (4) DECAB (5) EDACB (……)

[பக். 4 ஐப் பார்க்க

| | X | Y |
|---|---|---|
| **23.** | (i) சர்வதேச தொழிலாளர் தாபனம் (ILO) | A நியூயோர்க் |
| | (ii) உலக வங்கி | B வியன்னா |
| | (iii) ஐக்கிய நாடுகளின் சர்வதேச சிறுவர் நிதியம் (UNICEF) | C உரோம் |
| | (iv) உணவு, விவசாயத் தாபனம் (FAO) | D வாஷிங்டன் |
| | (v) சர்வதேச அணுசக்தி அமைப்பு (IAEA) | E ஜெனிவா |

(1) BEACD (2) CEABD (3) DEACB (4) DECAB (5) EDACB (……)

| | X | Y |
|---|---|---|
| **24.** | (i) கானா | A மில்ரன் ஒபேட்டோ |
| | (ii) தான்சானியா | B கென்னத் கவுண்டா |
| | (iii) உகண்டா | C ஜோமோ கென்யாட்டா |
| | (iv) கென்யா | D குவாமே நிகுறுமா |
| | (v) சம்பியா | E ஜூலியஸ் நியூரேரே |

(1) BEACD (2) CEABD (3) DEACB (4) DECAB (5) EDACB (……)

| | X | Y |
|---|---|---|
| **25.** | (i) றிகுவி லீ | A பர்மா |
| | (ii) டக் ஹம்மர்ஷீல்ட் | B ஆஸ்திரியா |
| | (iii) யூ தாண்ட | C நோர்வே |
| | (iv) குர்ட் வால்ட்கெய்ம் | D பெரு |
| | (v) பெரஸ் டி குயிலர் | E சுவீடன் |

(1) BEACD (2) CEABD (3) DEACB (4) DECAB (5) EDACB (……)

- **26** தொடக்கம் **30** வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்குமான சரியான விடையைத் தெரிந்து, அதன் **இலக்கத்தை அடைப்புப் புள்ளிக்கோட்டில்** எழுதுக.

**26. 'இறுதித் தீர்ப்பு' என்ற ஓவியத்தை வரைந்த புகழ்பெற்ற கலைஞர் யார் ?**
(1) மசாசியோ (2) பொற்றிசெல்லி
(3) லியனார்டோ டாவின்சி (4) மைக்கல் ஆஞ்சலோ
(5) ரிரியன் (……)

**27. அண்டத்தின் சூரிய மையக் கோட்பாட்டை முன்வைத்தவர் யார் ?**
(1) தொலமி (2) கொப்பர்ணிக்கஸ்
(3) கெப்ளர் (4) கலிலியோ கலிலி
(5) நியூற்றன் (……)

**28. இந்தியாவில் சமய சீர்திருத்த இயக்கமான பிரம்ம சமாஜத்தைத் தாபித்தவர் யார் ?**
(1) ரஜ்ஜித் சிங் (2) ராஜாராம் மோகன்ராய்
(3) தயானந்த சரஸ்வதி (4) பனர்ஜி
(5) பால் கங்காதர் திலக் (……)

**29. ஐக்கிய அமெரிக்க நாடுகளில் அடிமை முறையை ஒழித்தவர் யார் ?**
(1) பெஞ்சமின் பிராங்கிளின் (2) தோமஸ் ஜெபர்ஸன்
(3) ஜேம்ஸ் மொன்றோ (4) ஆபிரகாம் லிங்கன்
(5) தியோடர் ரூஸ்வெல்ற் (……)

**30. இந்தோனேசியாவின் முதல் ஜனாதிபதி யார் ?**
(1) குவிசோன் (2) அவுங் ஸான்
(3) துங் அப்துல் ரஹ்மான் (4) சுகர்டோ
(5) சுகர்ணோ (……)

[பக். 5 ஐப் பார்க்க

- **31** தொடக்கம் **35** வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் **(A), (B), (C), (D)** என்னும் நான்கு மாற்று விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் **ஒன்று** அல்லது **பல சரியான** விடைகளாகும். சரியான விடையை அல்லது விடைகளைத் தெரிவுசெய்து,

**(A)** யும் **(B)** யும் மட்டும் சரியாயின் ....................................... **1** எனவும்
**(B)** யும் **(C)** யும் மட்டும் சரியாயின் ....................................... **2** எனவும்
**(C)** யும் **(D)** யும் மட்டும் சரியாயின் ....................................... **3** எனவும்
**(A)** யும் **(C)** யும் மட்டும் சரியாயின் ....................................... **4** எனவும்

**ஒரு** விடை மட்டும் அல்லது **இரண்டிற்கு மேற்பட்ட** விடைகள் சரியாயின் ...... **5** எனவும் **அடைப்புப் புள்ளிக்கோட்டில்** எழுதுக.

| அறிவுறுத்தல்களின் சுருக்கம் | | | | |
|---|---|---|---|---|
| **1** | **2** | **3** | **4** | **5** |
| **(A)** யும் **(B)** யும் மட்டும் சரி | **(B)** யும் **(C)** யும் மட்டும் சரி | **(C)** யும் **(D)** யும் மட்டும் சரி | **(A)** யும் **(C)** யும் மட்டும் சரி | **ஒரு** விடை மட்டும் அல்லது **இரண்டிற்கு மேற்பட்ட** விடைகள் சரி |

**31. கிழக்கில் போர்த்துக்கேயரின் பேரரசு தொடர்பாகப் பின்வரும் கூற்றுகளில் எது / எவை சரியானது / சரியானவை ?**
(A) கி.பி. 1510 இல் மலாக்காவை போர்த்துக்கேயர் கைப்பற்றினர்.
(B) கோவாவில் போர்த்துக்கேயர் தமது கிழக்குப் பேரரசின் தலைமை தானத்தை அமைத்தனர்.
(C) கி.பி. 1597 இல் போர்த்துக்கேயர் பிலிப்பைன்ஸைக் கைப்பற்றினர்.
(D) போர்த்துக்கேயர் அம்பொய்னாப் படுகொலையின் பின்னர் வாசனைத் தீவுகளைக் கைப்பற்றினர்.

**32. பனிப்போர் தொடர்பாகப் பின்வரும் கூற்றுகளில் எது / எவை சரியனது / சரியானவை ?**
(A) ஐக்கிய அமெரிக்க நாடுகள், சோவியத் யூனியன் தலைமைதாங்கிய இரண்டு அதிகார அணிகளுக்கிடையே நிலவிய கருத்தியல், அரசியல், இராஜதந்திர ரீதியிலான போராட்டமே பனிப்போர் ஆகும்.
(B) 1949 இல் வட அத்திலாந்திக் ஒப்பந்த நாடுகள் அமைப்பு உருவாக்கம்
(C) 1955 இல் வார்சோ ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டமை
(D) பொதுவாக 1989 இல் பனிப்போர் முடிவுற்றதாகக் கருதப்படுகிறது. (......)

**33. பின்வருவனவற்றில் ஐக்கிய நாடுகள் தாபனத்தின் பிரதான அமைப்புகள் யாவை ?**
(A) சர்வதேச சங்கம் (B) பொதுநலவாயம்
(C) பொதுச் சபை (D) பாதுகாப்புச் சபை (......)

**34. பின்வருவோருள் சோவியத் யூனியனில் ஆட்சியாளர்களாக இருந்தோர் யாவர் ?**
(A) நிகிதா குருஷேவ் (B) அலெக்சாந்தர் சோல் ஷெனிஸ்ற்சின்
(C) லியோனிட் பிரஷ்னேவ் (D) அன்டிரய் சக்கரோவ் (......)

**35. ‘அபார்தீட்’ (Apartheid) கொள்கை தொடர்பாகப் பின்வரும் கூற்றுகளில் எது / எவை சரியானது / சரியானவை ?**
(A) கறுப்பினத்தவர்களையும் வெள்ளை இனத்தவர்களையும் இனரீதியாக வேறுபடுத்தும் தென்னாபிரிக்கக் கொள்கை அபார்தீட் எனப்படுகின்றது.
(B) ஆபிரிக்கர்களுக்கு அரசியல் உரிமை மறுக்கப்பட்டது.
(C) பிரித்தானியா அபார்தீட் கொள்கைக்கு ஆதரவளித்தது.
(D) ஐக்கிய நாடுகள் தாபனம் அபார்தீட் கொள்கைக்கு ஆதரவளித்தது. (......)

[பக். 6 ஐப் பார்க்க

- **36** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்களில் இரண்டு கூற்றுகள் வீதம் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினா தொடர்பாகவும் உள்ள கூற்றுச் சோடிக்குக் கீழே உள்ள அட்டவணையில் காணப்படும் **1, 2, 3, 4, 5** என்பவற்றில் மிகவும் பொருந்துவது எதுவென்பதைத் தெரிந்து, அதன் **இலக்கத்தை அடைப்புப் புள்ளிக்கோட்டில்** எழுதுக.

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| 1 | சரியானது | பிழையானது |
| 2 | சரியானது | சரியானது |
| 3 | பிழையானது | பிழையானது |
| 4 | பிழையானது | சரியானது |
| 5 | சரியானது | சரியானதும் **முதலாம்** கூற்றை நன்கு விளக்குவதுமாகும். |

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று | |
|---|---|---|---|
| **36.** | 1600 இல் ஆங்கிலக் கிழக்கிந்திய கம்பனி ஆரம்பிக்கப்பட்டது. | சீனத் துறைமுகங்களை மேற்கு நாடுகளுக்கு பலாத்காரமாகத் திறந்துவிட்டதன் மூலம் கையொப்பமிடப்பட்ட நான்கிங் உடன்படிக்கையினால் முதலாவது ஆங்கில - சீன யுத்தம் முற்றுப்பெற்றது. | (……) |
| **37.** | எஸ்ரேற் ஜெனரல் கூட்டம் கூட்டப்பட்டமையானது அமெரிக்க சுதந்திரப் புரட்சியின் ஆரம்பத்திற்கு வழிவகுத்தது. | 1789 - 1848 புரட்சிக் காலத்தில் பிரான்சில் சார்டிஸ்ட் இயக்கம் ஆரம்பமானது. | (……) |
| **38.** | 1886 இல் பர்மாவைப் பிரான்ஸ் கைப்பற்றியமை முற்றுப்பெற்றது. | மொங்குட் அல்லது நான்காம் ராமா சீயத்தில் நவீனமயமாக்கும் நடவடிக்கைகளை ஆரம்பித்தான். | (……) |
| **39.** | இரண்டாம் உலக யுத்தத்தின்போது ஜப்பான் கிழக்கிலும் தென்கிழக்கு ஆசியாவிலும் ஆக்கிரமிப்பு மற்றும் ஆதிக்கப் படர்ச்சிக் கொள்கையைப் பின்பற்றியது. | பேர்ள் துறைமுகத் தாக்குதலுடன் ஜப்பான் விரைவிலேயே பிலிப்பைன்ஸ், கிழக்கு இந்தியா, மலாயா, சிங்கப்பூர் மற்றும் பர்மாவைக் கைப்பற்றிக்கொண்டது. | (……) |
| **40** | 1946 இல் வின்சன்ட் சேர்ச்சில் பால்டிக் தொட்டு அட்ரியாட்டிக் வரையிலான ஐரோப்பாக் கண்டம் ஊடாக இரும்புத்திரைக் காணப்படுவதாகப் பிரகடனம் செய்தார். | ஜோசப் ஸ்ராலின் பிரஸ்ரோறிக்கா அல்லது பொருளாதார மறுசீரமைப்புக் கொள்கையைப் பின்பற்றினான். | (……) |

* *

[பக். 7 ஐப் பார்க்க

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2018 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2018 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2018

ඉතිහාසය II
வரலாறு II
History II

25-C T

ප්‍රශ්න අංකය / வினா இல. / Question No. **1**

විභාග අංකය / சுட்டெண் / Index No. ..............................



ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව /முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2018 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2018 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2018

ඉතිහාසය II (II කොටස)
வரலாறு II (பகுதி II)
History II (Part II)

25-C T II

## நவீன உலக வரலாறு - கி.பி. 1500 - 1989 வரை

**அறிவுறுத்தல்கள் :**

※ **முதலாம்** வினாவுக்கும் வேறு ஏதாவது **மூன்று** வினாக்களுக்கும் விடை எழுதுக.
(**முதலாம்** வினாவுக்கு விடையளிப்பதற்கு **உலகப் புறவுருவப்படம்** வழங்கப்படும்.)

### பகுதி II

**1.** உமக்குத் தரப்பட்ட வரைபடத்தில் கீழே குறிப்பிட்டுள்ள இடங்கள் **எல்லாவற்றையும் குறித்துப்** பெயரிட்டு, அவற்றுள் எவையேனும் **இரண்டினைப்** பற்றிச் **சுருக்கமான வரலாற்றுக் குறிப்புகள்** எழுதுக.

(i) அமேசன் நதி (ii) அப்பலாச்சியன் மலைகள் (iii) பால்டிக் கடல்
(iv) போர்ணியோ (v) மொஸ்கோ (vi) பம்பாய்
(vii) ஈரான் (viii) கேப் டவுண்

*(சரியாகக் குறித்துப் பெயரிட்ட ஒவ்வொன்றுக்கும் **01** புள்ளி; சிறுகுறிப்பு ஒவ்வொன்றுக்கும் **05** புள்ளிகள்)*

**2.** (i) மறுமலர்ச்சி தோற்றம் பெறுவதற்கு வழிவகுத்த காரணிகளைச் சுருக்கமாக ஆராய்க. (06 புள்ளிகள்)

(ii) நவீன வரலாற்றில் மறுமலர்ச்சியின் முக்கியத்துவத்தைப் பற்றிப் பரிசீலனை செய்க. (08 புள்ளிகள்)

**3.** “தொழிற்புரட்சியானது, ஐரோப்பாவில் பொருளாதார, சமூகத் துறைகளில் அடிப்படையான மாற்றங்களை ஏற்படுத்தியது.”

(i) தொழிற்புரட்சி எந்த நாட்டில் ஆரம்பித்தது ? (01 புள்ளி)

(ii) தொழிற்புரட்சியின் ஆரம்பக் கட்டத்தில் நெசவுக் கைத்தொழில் துறையில் கண்டுபிடிக்கப்பட்ட **இரண்டு** இயந்திரங்களின் பெயர்களைத் தருக. (02 புள்ளிகள்)

(iii) தொழிற்புரட்சியின் தோற்றத்திற்கு வழிவகுத்த பிரதான காரணிகள் பற்றி சுருக்கமாகக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iv) ஐரோப்பாவின் பொருளாதார, சமூகத் துறைகளில் அடிப்படையான மாற்றங்களைத் தொழிற்புரட்சி ஏற்படுத்தியதனைப் பற்றி, அதன் விளைவுகளைக் கருத்திற் கொண்டு பரிசீலனை செய்க. (07 புள்ளிகள்)

**4.** “தொடர்ச்சியான நிகழ்வுகளின் புரட்சியே பிரான்சியப் புரட்சியாகும்.”

(i) பிரான்சியப் புரட்சியின் ஆரம்பத்தின்போது பிரான்சை ஆட்சிபுரிந்த மன்னனின் பெயரைத் தருக. (01 புள்ளி)

(ii) புரட்சிக்கு முந்திய காலத்தில் பிரான்சில் வாழ்ந்த **இரண்டு** தத்துவஞானிகளின் பெயர்களைத் தருக. (02 புள்ளிகள்)

(iii) பிரான்சியப் புரட்சிக்கு முன்னரான அண்மைய காலப்பகுதியில் பல்வேறு சமூகப் பிரிவுகள் அல்லது எஸ்ரேற்றுகளில் காணப்பட்ட மனக்குறைகள் பற்றிச் சுருக்கமாகக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iv) “தொடர்ச்சியான நிகழ்வுகளின் புரட்சியே பிரான்சியப் புரட்சியாகும்.” பிரான்சியப் புரட்சியின் பிரதான கட்டங்களை ஆதாரமாகக் கொண்டு இக்கூற்றினை ஆராய்க. (07 புள்ளிகள்)

[பக். 8 ஐப் பார்க்க

**5.** மேஜி முன்னிலை மீட்சியிலிருந்து முதலாம் உலகப் போர் வரையிலான காலப்பகுதியில் ஜப்பானில் அரசியல், சமூக, பொருளாதாரத் துறைகளில் ஏற்பட்ட மாற்றங்களை விவரிக்குக. (14 புள்ளிகள்)

**6.** முதலாம் உலகப் போருக்கு ஏதுவான காரணிகளை நுணுக்கமாக ஆராய்க. (14 புள்ளிகள்)

**7.** "இந்தியாவின் தேசிய விடுதலைக்கான போராட்டங்கள் இந்தியாவை இரண்டு நாடுகளாகப் பிரிப்பதிலே முடிவுற்றன." 1935 இலிருந்து இந்திய தேசிய விடுதலை இயக்கத்தின் பிரதான கட்டங்களைக் கவனத்திற் கொண்டு இக்கூற்றினை ஆராய்க. (14 புள்ளிகள்)

**8.** செக்கோஸ்லோவாக்கிய நெருக்கடியின் இறுதிக் காலம் வரையிலான பகுதியில் உலக சமாதானத்தைப் பேணிப் பாதுகாப்பதில் ஐக்கிய நாடுகள் தாபனம் ஆற்றிய பங்கினை நுணுகமாக ஆராய்க. (14 புள்ளிகள்)

**9.** **(A)** பகுதிக்கு **அல்லது** **(B)** பகுதிக்கு மட்டும் விடை எழுதுக.

**(A)** (i) சீனப் பொதுவுடைமைப் புரட்சி ஏற்படுவதற்கு ஏதுவாயமைந்த அரசியல் மற்றும் பொருளாதாரப் பின்னணிப் பற்றி பகுத்தாராய்க. (08 புள்ளிகள்)

(ii) அப்புரட்சியின் வெற்றிக்கு மாஓசேதுங்கின் தலைமைத்துவம் எந்தளவிற்குக் காரணமாய் அமைந்தது என்பதனைப் பரிசீலனை செய்க. (06 புள்ளிகள்)

**(B)** மேல்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டின்** வரலாற்று முக்கியத்துவம் பற்றிச் சுருக்கமான குறிப்பு எழுதுக.

(i) அமெரிக்க உள்நாட்டு யுத்தம்

(ii) 1857 இந்தியக் கலகம்

(iii) போல்ஷிவிக் புரட்சி

(iv) பனிப்போர் (ஒவ்வொன்றுக்கும் 07 புள்ளிகள் வீதம்)

* * *

PAST PAPERS WIKI

WWW.PastPapers.WIKI

Past Papers Wiki - Download More Past Papers and Study Well!